1970 ஆகஸ்ட் 29]

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, போலீசாரின் உடை 1947க்குப் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சுதந்திர உணர்வைப் பிரதி பலிப்பதாக இல்லை என்பதைக் கருதி அரசு அந்த உடையை மாற்ற ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது உத்தேசம் இல்லை.

Agricultural University

* 117 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether any Central grant is being secured by the State Government for starting an Agricultural University in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏறக்குறைய 2 கோடி ரூபாய் மத்திய உதவி கிட்டு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கான மசோதா தயாரானதும் மத்திய மானியம் பெறுவது பற்றிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: தலைவர் அவர்களே, புதிதாக அமைக்கப்பட இருக்கும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் எங்கே அமைக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கோவையில் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தமிழ்நாட்டின் நெற்களஞ்சிய மான தஞ்சையில் விவசாயத்திற்காக அதிகப்படியாக அரசு பணம் செலவழிக்கும் நிலையில் தஞ்சை மாவட்டத்தில் அந்தப் பல்கலைக் கழகத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அளவுக்கு கோவையில் நல்ல வசதிகள் இருக்கின்றன. நல்ல பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. வேளாண்மைக் கல்லூரியே இருக் கிறது. கலைக் கல்லூரி தேவை, அதுவும் இருக்கிறது. டொமஸ்டிக் ஸயன்ஸ் கல்லூரியும் இருக்கிறது. கிட்டத்தட்ட 750 ஏக்கர் பண்ணை இருக்கிறது. காட்டு இலாகாவும் கல்லூரியில் இணைக்கப்பட்டிருக் கிறது. இவைகளை எல்லாம் ஆலோசித்து அதிகப்படியான செலவு இல்லாமல் கோவையில் பல்கலைக்கழகத்தை அமைக்கும் சூழ்நிலை இருப்பதால் கோவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

மதுரை வேளாண்மைக் கல்லூரி

* 118 வினா—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு, ஆகஸ்டு 22-ம் தேதி அளவில் மதுரை விவசாயக் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டது உண்மையா?